2006 ஜனவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனாலே அமைச்சரை நீங்கள் குற்றம் சொல்லக்கூடாது.*

திரு. ஜி. பழனிசாமி: இல்லை, நமக்கு இல்லை, நமக்கு இல்லை. தமிழ்நாட்டிற்குக் கிடையாது, பிற பல மாநிலங்களிலும் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 28, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

28—

சார்பதிவாளர் அலுவலகம்

*** 53774—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் புதிதாக கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் அரசுக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. போதிய இடவசதி உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி என்னும் அரக்கனை அழித்து, வெள்ளம் என்ற சூறாவளியை விரட்டி, தமிழகத்தை எல்லாத் துறைகளிலும் உயர்த்திக் காட்டி புதிய சகாப்தம் படைத்த உலகத் தமிழர்களின் ஒளிவிளக்காய் ஜொலித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கழுகுமலை குடவறை கோயில் அழகுபடுத்தும் பணிக்காக, தமிழக சுற்றுலா வளர்ச்சிக்

கழகத்தின்மூலமாக ரூ.48.60 இலட்சங்களை ஒதுக்கீடு செய்து சுற்றுலாத்தலத்தைச் சிறப்பாக அமைத்து, கழுகுமலையை பூஞ்சோலையாக மாற்றி 14–1–2006 அன்று, தமிழர் திருநாள் அன்று, கழுகுமலையில் அமைந்துள்ள கழுகாஸ்வரமூர்த்தி கோயிலிலே அன்னதானத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து, பக்தர்களின் வயிற்றில் பால் வார்த்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், பக்தர்கள் சார்பாகவும் நன்றியினைக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே சார்பதிவாளர் அலுவலகம் 1865 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு, 140 வருடங்களாக மிகப் பழமைவாய்ந்த ஒரு ஓட்டுக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. இங்கு 35 கிராம மக்கள் பத்திரப் பதிவு செய்து வருகிறார்கள். ஆகையினால் அந்த ஆவணங்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் அரசுக் கட்டடம், ஒரு புதிய கட்டடம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் ஊரின் பிரதான மையத்தில், அனைத்துத் தரப்பு மக்களும் வந்து போகும் வசதியான இடத்தில் அமைந்துள்ளது. மக்கள் அமர மற்றும் கணினிமயமாக்கப்பட்ட வசதியுடன் போதிய இட வசதி உள்ளது. கட்டடம் நல்ல நிலையில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக அரசுக் கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவகங்களைப் பொறுத்தவரையில், கட்டடங்கள் உறுதியிழந்து, பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ள அரசுக் கட்டடங்களை இடித்துவிட்டு, புதிய கட்டடங்கள் முன்னுரிமை அடிப்படையில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், மீண்டும் அதனுடைய உறுதித்தன்மையை பரிசோதனை செய்து, உறுதித்தன்மை இழந்திருந்தால் சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, என்னுடைய தொகுதியில் உள்ள கழுகுமலை, கடம்பூர் ஆகிய இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

2006 ஜனவரி 18]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கட்டடங்களையாவது அரசுக் கட்டடங்களாக மாற்றி, புதிய கட்டடங்கள் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தனியார் கட்டடத்திலே இயங்கிவருகின்ற சார் பதிவாளர் அலுவலகங்களைப் படிப்படியாக அரசு கட்டடங்களிலே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். நடப்பு நிதியாண்டில் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கிவருகின்ற அலுவலகங்களை அரசுக் கட்டடத்தில் கட்டி நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை வருகின்ற நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எல்லா துறை மக்களும் மிகவும் சந்தோஷத்தோடு வாழ்ந்து வருகின்ற இந்தக் காலத்தில், சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் ஏறத்தாழ 100 வருடங்கள் பழமைவாய்ந்தது. அதைச் சுற்றிலும் 100 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதியில்தான் பதிவு செய்ய வரவேண்டும். அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து ஒழுகுகிற நிலையிலே உட்காருவதற்கு இடமில்லாத நிலையிலே உள்ளது. அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்த்தோ அல்லது புதிய கட்டடம் கட்டவோ அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய சார்பதிவாளர் அலுவலகத்தினுடைய கட்டடத்தின் உறுதித் தன்மையைப் பரிசீலனை செய்து நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஜனவரி 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஈரோட்டில் மாவட்டப் பதிவாளர் அலுவலகமும், சார்பதிவாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்திலே இயங்கிவருகின்றன. அந்த இரண்டு கட்டடங்களுக்கும் புதிய அரசு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நடப்பு நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29. திரு. சி. சிவசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

29—

தனி மாவட்டம்

*****74269—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பூர் நகரை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.